# விவேகானந்த கல்லூரி

04543-258234, 258334
நிகரி : 04543-258358

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) 'A' கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.org மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org

சுவாமி நியமானந்த
செயலர்



முனைவர் **சி.இராஜா**
முதல்வர்

# குருகுலச் சுடர்

கல்வியாண்டு 2017-18

சுடர் : 4

செப்டம்பர் 2017


**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த செப்டம்பர் 2017ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

**குருகுலம் சம்பந்தமானது**

18.09.2017 முதல் 22.09.2017 வரை அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் முதல் பருவத்தின் இரண்டாம் அகமதிப்பீட்டுத் தேர்வு நடைபெற்றது.

04.09.2017, 11.09.2017, 18.09.2017, 25.09.2017 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 8.10 மணிக்கு கல்லூரியில் தேசியக் கொடியேற்றம் நடைபெற்றது.

02.09.2017, 09.09.2017, 16.09.2017, 23.09.2017, 30.09.2017 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணி முதல் 6.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.

06.09.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் மாதாந்திர தேவை அறிதல் கூட்டம் நடைபெற்றது. இதில் மாணவர்கள் தங்கும் அறைகளின் பிரதிநிகள் கலந்துகொண்டு தங்கள் தேவைகளைத் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் கல்லூரி செயலர், முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக்குழு இயக்குநர், உணவுக்கூட மேலாளர், பேராசிரியர்கள், விடுதி ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் கண்காணிப்பாளர்கள் கலந்துகொண்டு மாணவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர்.

11.09.2017 அன்று மாலை கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் செம்படம்பர் 11, 1893 அன்று அமெரிக்க தேசத்தின் சிகாகோ மாகாணத்தில் நடைபெற்ற சர்வ சமய மகாசபையில் சுவாமி விவேகானந்தர் இந்தியா மற்றும் இந்து சமயத்தின் பெருமைகளை உலகோர் அறிய உரையாற்றியதன் நினைவு தினம் மற்றும் மகாகவி பாரதியாரின் பிறந்ததினம் கொண்டாடப்பட்டது. இதில் விவேகானந்தர் போல் வேடமணிந்த மாணவர் ஒருவர் தமிழிலும், ஒருவர் ஆங்கிலத்திலும் விவேகானந்தரின் உரையை நிகழ்த்திக் காட்டினர். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திரு.J.சரவண செல்வன், "வீரத்துறவியும், மகாகவியும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர், முதல்வர், துணை முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரியின் அனைத்து மாணவர்கள் கலந்துகொண்டனர்.

18.09.2017 அன்று காலை 10.00 மணிமுதல் 12.00 மணி வரை கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்புல ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் A.ஸ்ரீநிவாஸன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு "தமிழர் அற வியல்" என்ற தலைப்பில் தமிழர் பின்பற்றிய அறவாழ்க்கை குறித்து தமிழ் இலக்கியங்களை மேற்கோள் காட்டி சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர், முதல்வர் மற்றும் அனைத்து பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

22.09.2017 முதல் 29.09.2017 வரை ஒன்பது நாட்கள் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொலு அமைத்து காலை மற்றும் மாலையில் சிறப்பு பஜனையுடன் கொண்டாடப்பட்ட இவ்விழாவின் ஒன்பதாம் நாள் 29.09.2017 அன்று காலை 4.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையிலான அகண்ட நாம ஜெபத்துடன் சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மாணவர்கள் தங்கள் அறைகளை அலங்கரித்து சிறப்பு வழிபாடுகள் நடத்தினர். அவற்றில் மிக சிறப்பாகக் கொண்டாடிய மாணவர்களுக்கு அன்று மாலை நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

23.09.2017 அன்று கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க கூட்டம் நடைபெற்றது. அதில் முன்னாள் மாணவர்கள் 83 பேர் கலந்துகொண்டு தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன் அடுத்த ஆண்டின் செயல்பாடுகள் குறித்து ஆலோசித்தனர். அன்று பிற்பகல் தாங்கள் பயின்ற துறைகளுக்குச் சென்ற முன்னாள் மாணவர்கள் தங்கள் அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

23.09.2017 முதல் 26.09.2017 வரை இராமநாதபுரத்தில் நடைபெற்ற ராஷ்டிரிய ஸ்வயம் சேவக் சங்கத்தின் பேண்டு வாத்திய இசை பயிற்சி முகாமில் நமது கல்லூரியின் 7 மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

24.09.2017 அன்று மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற தூய்மையே சேவை நிகழ்ச்சியில் நமது கல்லூரி மாணவர்கள் 63 பேர் பேராசிரியர்கள் M.பிரேமானந்தம், C.சௌந்தர்ராசு, குருமேகலைராஜன் ஆகியோர் மேற்பார்வையில் சென்று தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

26.09.2017 அன்று காலை 9.40 மணி முதல் 12.40 மணி வரை கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் சக்தி அந்தர்யோகம் நடைபெற்றது. சிறப்பு பஜனையுடன் ஆரம்பித்த இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த ஆன்மிக சொற்பொழிவு நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஆன்மிகம் சார்ந்த பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

27.09.2017 அன்று மதுரை, மருத்துவக் கல்லூரியின் சார்பில் நடத்தப்பெற்ற உலக இளைஞர் தின விழிப்புணர்வு மினி மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் நமது கல்லூரியின் 59 மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்களை விடுதிக் கண்காணிப்பாளர் C.சுகுமாறன் அழைத்துச் சென்றார்.

**பொருளியல் துறை**

12.09.2017 அன்று மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் பொருளியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் பேராசிரியர் N.தினகரன் மேற்பார்வையில் 13 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் பேச்சுப்போட்டியில் மூன்றாமாண்டு மாணவன் அரவிந்தன் முதல் பரிசு பெற்றார்.

13.09.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ‘OIKOS MEET’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகியவற்றை இரண்டாமாண்டு மாணவர்கள் மேற்கொண்டனர். கட்டுரை வாசித்தல், வினாடிவினா, Who Am I?, செய்திகள் வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகியற்றை மூன்றாமாண்டு மாணவர்கள் நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் G.ராமர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

25.09.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக கல்வியியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் C.மனோகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு “தொழில்முனைவோருக்கான தேவை மற்றும் முக்கியத்துவம்” என்ற தலைப்பில் உரையாற்றியதுடன் மாணர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர், முதல்வர், துறைப்பேராசிரியர்கள் மற்றும் பொருளியல் துறையின் அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டனர்.

**வரலாற்றுத்துறை**

27.09.2017 அன்று மதுரை டிராவல் கிளப் மற்றும் TATA தானம் கல்வி நிலையம் இணைந்து நடத்திய மதுரை, JC ரெசிடென்ஸி ஹோட்டலில் நடத்திய ‘Know Your Asia’ என்ற தலைப்பிலான வினாடிவினா போட்டியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர் T.காளியப்பன் தலைமையில் 5 மாணவர்கள் சென்று கலந்துகொண்டனர்.

**வணிகவியல் துறை Bold**

02.09.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் மென் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் Weekly News Bulletin, Paper Presentation, Who Am I?, Views of the News, Business Quiz ஆகிய நிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பெற்றன. இந்நிகழ்ச்சியில் வணிகவியல் கணினி கணினிப்பயன்பாட்டுத் துறை உதவிப்பேராசிரியர் B.மாரிமுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பாகப் பங்குகொண்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

11.09.2017 அன்று மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான COM–ARENA 2K17 போட்டிகளில் வணிகவியல் மாணவர்கள் துறையின் உதவிப்பேராசிரியர் முனைவர் S.வடிவேல்ராஜா வழிநடத்தலில் சென்று கலந்துகொண்டனர்.

14.09.2017 அன்று போடிநாயக்கனூர், CPA கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற மாநில அளவிலான ஒருநாள் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ‘An Overview of Goods and Services Tax – Law and Practice’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கில் வணிகவியல் துறை மாணவர்கள் 4 பேர் கலந்துகொண்டனர்.

18.09.2017 அன்று திருச்சி, புத்தனாம்பட்டி, நேரு நினைவு கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வில் பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் புறத்தேர்வராகக் கலந்துகொண்டு தேர்வை நடத்தினார்.

**கணிதத்துறை**

01.09.2017 அன்று மதுரை, பாத்திமா மகளிர் கல்லூரியின் கணிதவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டியில் 12 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் Dump Charade போட்டியில் இரண்டாமிடமும், Rangoli போட்டியில் முதலிடமும் பெற்று பரிசுகள் பெற்றனர். மாணவர்களை பேராசிரியர் P.மாடமாசி வழிநடத்தி அழைத்துச் சென்றார்.

4.09.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற MATH-E-CLUB-9 நிகழ்ச்சியில் கணிதவியல் தொடர்பான பல்வேறு போட்டிகளை மூன்றாமாண்டு மாணவர்கள் நடத்தினர். போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்குத் துறைத்தலைவர் பேராசிரியர் P.நடராஜன் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

06.09.2017 அன்று திண்டுக்கல் GTN கல்லூரியின் கணிதவியல் துறையில் கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெற்றன. இதில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு ரங்கோலி போட்டியில் இரண்டாமிடமும், வினாடிவினா போட்டியில் மூன்றாமிடமும் பெற்றனர். மாணவர்களை பேராசிரியர் முனைவர் C.ராஜன் வழிநடத்தி அழைத்துச் சென்றார்.

07.09.2017 மற்றும் 08.09.2017 ஆகிய இரண்டு நாட்கள் சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற ‘Techniques in Abstract Mathematics’ என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியர் T.பொன்னுச்சாமி மற்றும் 5 மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

15.09.2017 அன்று சிவகாசி, காளீஸ்வரி மகளிர் கல்லூரியில் கணிதவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு ரங்கோலி போட்டியில் முதல் பரிசு பெற்றனர். மாணவர்களை உதவிப்பேராசிரியர் T.பொன்னுச்சாமி வழிநடத்தி அழைத்துச்சென்றார்.

**இயற்பியல் துறை**

07.09.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் ‘Thursday Meet-8’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி இரண்டாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. வரவேற்புரையுடன் துவங்கிய நிகழ்ச்சியில் திருக்குறள் மற்றும் அதன் தெளிவுரை, Dump Charade, இயற்பியலோடு தொடர்புடைய ‘Connections’ நிகழ்ச்சி, இயற்பியல் விதி பற்றிய விளக்கவுரை, இயற்பியல் கட்டுரை சமர்ப்பித்தல் ஆகியவை நிகழ்த்தப்பட்டன. நிறைவாக நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

07.09.2017 மற்றும் 08.09.2017 ஆகிய இரு நாட்கள் மதுரை தியாகராஜர் கல்லூரியின் வேதியியல் துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட “International Conference on Functional Materials 2017” (ICFM 2017)” கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர்கள் திரு.V.ராஜேந்திரன் மற்றும் திரு.S.கணேசன் பங்கு கொண்டு தங்கள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

14.09.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் ‘Thursday Meet-9’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி முதலாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. வரவேற்புரையுடன் துவங்கிய நிகழ்ச்சியில் திருக்குறள் மற்றும் அதன் தெளிவுரை, Dump Charade, இயற்பியல் வினாடிவினா, இயற்பியல் செய்திகள், விண்வெளி நிகழ்வுகள் குறித்த ஒலி-ஒளி காட்சி, இயற்பியல் வார்த்தை விளையாட்டு Jumbled Words ஆகிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

14.09.2017 அன்று இயற்பியல்துறை மூன்றாமாண்டு மாணவர்கள் பேராசிரியர்கள் திரு.P.ஜெயசங்கர் மற்றும் முனைவர் N.மீனாட்சிசுந்தரம் ஆகியோருடன் திருநெல்வேலி மாவட்டம், மகேந்திரகிரியிலுள்ள இந்திய வானியல் ஆய்வு நிறுவனத்தினை பார்வையிட்டு விண்வெளி குறித்த பல்வேறு தகவல்களைக் கேட்டு அறிந்தனர்.

**வேதியியல் துறை**

08.09.2017 அன்று இளங்கலை மூன்றாமாண்டு வேதியியல் மற்றும் முதுகலை வேதியியல் மாணவர்கள் திருநெல்வேலி, மகேந்திரகிரியில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்திற்கு சென்று விண்வெளி ஆய்வு குறித்த பல்வேறு தகவல்களைக் கேட்டறிந்தனர். மாணவர்களை துறைத்தலைவர் B.சேர்வாரமுத்து, உதவிப்பேராசிரியர்கள் முனைவர் D.திருப்பதி, M.இரகு ஆகியோர் வழிநடத்தினர்.

20.09.2017 அன்று மதுரை, சௌராஷ்டிரா கல்லூரியின் வேதியியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் யு.கண்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு “Fundamentals of MRI Techniques” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**தாவரவியல் துறை**

22.09.2017 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்ப புலத்தின் மூலக்கூறு நுண்உயிரியல் துறையில் நடைபெற்ற “Meet the Scientist” ஒருநாள் சிறப்பு விரிவுரை நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் C.சௌந்தர்ராசு கலந்துகொண்டார்.

தாவரவியல் துறை சார்பாக பரவிவரும் பல்வேறு காய்ச்சலை தடுக்கும் நடவடிக்கையாகக் கல்லூரி மாணவர்களுக்கு இம்மாதத்தின் அனைத்து நாட்களிலும் நிலவேம்பு கசாயம் தயாரித்து வழங்கப்பட்டது.

**வணிகவியல் கணினிப்பயன்பாடு துறை**

01.09.2017, 08.09.2017 மற்றும் 15.09.2017 ஆகிய நாட்களில் கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் ஆளுமைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளில் Weekly News Bulletin (ஆங்கிலம், ஹிந்தி), வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், ஆவணப்படம் தயாரித்து வெளியிடல், வரவேற்புரையும், நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகிய நிகழ்வுகள் துறை மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன.

**கணினிஅறிவியல் துறை**

06.09.2017 அன்று ‘Software Skills Development Programme’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. மூன்றாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கட்டுரை சமர்ப்பித்தல், Weekly News, கணினிஅறிவியல் சம்பந்தமான வினாடிவினா, Identify the Personality, Debugging ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக உடற்கல்வித்துறை இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

07.09.2017 அன்று துறை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மதுரை BSNL அலுவலகத்திற்கு தொழிற்சாலை பார்வையிடல் (Industrial Visit) நிகழ்ச்சிக்காகச் சென்றனர். அங்கு மாணவர்கள் தகவல்தொடர்பு இணையம் குறித்த விவரங்களை அலுவலர்களிடம் கேட்டறிந்தனர்.

08.09.2017 அன்று சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியின் கணினி அறிவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான கலைப்போட்டிகளில் (TECNEST’17) 15 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் Software Marketing போட்டியில் முதல் பரிசு பெற்றனர். மாணவர்களை உதவிப் பேராசிரியர் திரு.R.கிருஷ்ணசாமி அழைத்துச் சென்றார்.

14.09.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் கணினி அறிவியல் துறை மற்றும் சேலம் ராயல் எக்ஸலென்ஸியா நிறுவனம் இணைந்து நடத்திய “இணைய தொழில்நுட்பம் (Web Technology)” என்ற தலைப்பில் மாநில அளவிலான ஒருநாள் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இதில் சேலம், ராயல் எக்ஸலென்ஸியா நிறுவனத்தினர் நிறுவனர் திரு T.கேசவமூர்த்தி, அலுவலர்கள் திரு சரவண், திரு விக்னேஷ் ஆகியோர் கலந்துகொண்டு இணைய தொழில்நுட்பத்தின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து விரிவாக உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர்

சுவாமி நியமானந்த ஆசியுரை வழங்கினார். கல்லூரி முதல்வர் தலைமையுரையாற்றினார். மேலும் துறையின் ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**ஆங்கிலத்துறை**

14.09.2017 அன்று மதுரை, அமெரிக்கன் கல்லூரியின் ஆங்கில இலக்கியத் துறையில் ஆசியன் இதழியல் கல்லூரி மற்றும் ஊடக வளர்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. சசிக்குமார் ஆற்றிய 'Where is the Mind Without Fear?' என்ற தலைப்பிலான விரிவுரை நிகழ்ச்சியில் நமது கல்லூரியின் இளங்கலை ஆங்கில இலக்கிய மாணவர்கள் 39 பேர் நடைபெற்ற உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா உடன் சென்று கலந்துகொண்டனர்.

22.09.2017 அன்று சாத்தூர், SRNM கல்லூரியின் ஆங்கில இலக்கிய துறையில் நடைபெற்ற தேசிய அளவிலான இரண்டுநாள் கருத்தரங்கில் பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா கலந்துகொண்டு 'A Cultural Analysis of Thomas Hardy's Tess of the D'urberilles' என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையினை சமர்ப்பித்தார்.

28.09.2017 அன்று தர்மபுரி, டான் போஸ்கோ கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Post Colonialish: Literary Theory and Criticisms' என்ற தலைப்பில் உரையாற்றி பயிற்சிப் பட்டறையைத் துவக்கிவைத்தார்.

**உடற்கல்வித்துறை**

31.08.2017 முதல் 03.09.2017 வரை மதுரை, டாக்டர் M.G.R. விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாநில தடகள போட்டிகளில் மூன்றாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவர் R.தீபன் கலந்துகொண்டார். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் உடன் சென்றார்.

03.09.2017 அன்று நமது கல்லூரியில் கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரி மற்றும் நமது கல்லூரியின் கால்பந்து அணியினரிடையே நட்பு ரீதியிலான போட்டி நடைபெற்றது.

06.09.2017 அன்று பிற்பகல் கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரி மற்றும் நமது கல்லூரி அணியினருக்கிடையேயான நட்பு ரீதியிலான கோ-கோ போட்டி நடைபெற்றது.

30.08.2017 மற்றும் 31.08.2017 ஆகிய இரு நாட்கள் மதுரை, சௌராஷ்டிரா கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக 'B' மண்டல கல்லூரிகளுக்கிடையேயான கூடைப்பந்துப் போட்டி நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட நமது கல்லூரி அணியிலிருந்து மூன்றாமாண்டு தாவரவியல்துறை மாணவர் சதீஷ்குமார் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மண்டலங்களுக்கிடையிலான போட்டிக்குத் தேர்வாகி 04.09.2017 மற்றும் 05.09.2017 ஆகிய நாட்களில் திண்டுக்கல் GTN கல்லூரியில் நடைபெற்ற மண்டலங்களுக்கிடையிலான போட்டியில் 'B' மண்டலம் சார்பாகக் கலந்துகொண்டு விளையாடினார்.

10.09.2017 அன்று நமது கல்லூரியின் கால்பந்து அணியினர் வாடிப்பட்டி, தாய் மெட்ரிக் பள்ளி மைதானத்தில் அப்பள்ளியின் கால்பந்து அணியினருடன் நட்பு ரீதியிலான போட்டியில் கலந்துகொண்டனர்.

13.09.2017 மற்றும் 14.09.2017 ஆகிய நாட்களில் மதுரைக் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'B' மண்டல கல்லூரிகளுக்கு இடையேயான கோ-கோ போட்டியில் நமது கல்லூரி அணி மாணவர்கள் கலந்துகொண்டு இரண்டாம் இடம் பிடித்தனர். இதில் தேர்வான 5 மாணவர்கள் 19.09.2017 மற்றும் 20.09.2017 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை, S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான கோ-கோ போட்டியில் 'B' மண்டல அணியில் கலந்துகொண்டு விளையாடினர். இதில் 'B' மண்டல அணி வெற்றி பெற்றது. இப்போட்டிகளில் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் தேர்வுக்குழுவில் தேர்வராகக் கலந்துகொண்டார்.

17.09.2017 அன்று நமது கல்லூரியில் நடைபெற்ற நட்பு ரீதியிலான போட்டியில் கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியின் கைப்பந்து அணியினர் நமது கல்லூரி அணியுடன் மோதினர்.

19.09.2017 அன்று பிற்பகல் நமது கல்லூரி மைதானத்தில் சோழவந்தான் கிரிக்கெட் கிளப் அணியினர் மற்றும் நமது கல்லூரி கிரிக்கெட் அணியினருக்கிடையேயான நட்பு ரீதியிலான போட்டி நடைபெற்றது.

20.09.2017 அன்று மதுரைக் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக 'B' மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் நமது கல்லூரி அணி கலந்துகொண்டது. அதில் பங்குகொண்ட மூன்றாமாண்டு கணிதவியல் மாணவன் ராஜேஸ் 26.09.2017 மற்றும் 27.09.2017 ஆகிய நாட்களில் மதுரை, மதுரைக் கல்லூரியில் நடைபெற்ற பல்கலைக்கழக மண்டலக்களுக்கிடையிலான போட்டியில் 'B' மண்டல அணிக்குத் தேர்வாகி விளையாடினார்.

**நூலகத்துறை**

நூலகர் முனைவர் M.பிரபாகரன், 06.09.2017 அன்று மதுரை சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நூலக மேம்பாட்டுக் கூட்டத்தில் தேசிய தர நிர்ணயக் குழு ஆலோசகராகக் கலந்துகொண்டு அக்கல்லூரியின் மைய நூலக மேம்பாடு குறித்து ஆலோசனைகள் வழங்கினார். மேலும் அன்று பிற்பகல் மைய நூலகத்தினால் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "Open Access, E-Resources for Academic Community" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**NSS/NCC/அப்பர் உழவாரப்பணிக் குழு**

19.08.2017 முதல் 04.09.2017 வரை புதுதில்லி, ஆக்ராவில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான Annual Leadership Camp நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் K.விஷ்ணு (III Phy) கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.

01.0.2017 அன்று சோழவந்தான், விவேகானந்த மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அப்பள்ளியில் ஆண்டு விழாவில் மக்கள் கூட்டத்தினை நெறிப்படுத்தும் பணியில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 50 பேர் கலந்துகொண்டனர்.

08.09.2017 முதல் 17.09.2017 வரையிலான பத்து நாட்கள் திண்டுக்கல், GTN கலைக் கல்லூரியில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான வருடாந்திர ஒருங்கிணைந்த பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் V.ராஜேந்திரன் தலைமையில் 42 மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

22.09.2017 முதல் 03.10.2017 வரை திருச்சி BHEL நிறுவனத்தில் நடைபெற்ற புதுதில்லி குடியரசுதின அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான தேர்வு முகாமில் P.அழகர்ராஜா (II Phy), A.பால அரவிந்த் (II B.Com) ஆகியோர் கலந்துகொண்டு அடுத்த நிலை முகாமிற்குத் தேர்வாகினர்.

24.09.2017 அன்று மதுரை மாவட்டம், திருவேடகத்தின் வைகைக்கரையில் அமைந்துள்ள துர்க்கையம்மன் கோயில் மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள வைகை நதிக்கரை படித்துறை ஆகியவற்றை சுத்தம் செய்தல் மற்றும் சிதிலமடைந்த படித்துறையை சீர்செய்தல் ஆகிய பணிகளில் இரண்டாமாண்டு அப்பர் உழவாரப் பணிக்குழு மாணவர்கள் 70 பேர் பேராசிரியர் முனைவர் K.செல்லப்பாண்டியன், M.பிரேமானந்தம் மற்றும் R.மோகன்ராஜ் ஆகியோர் மேற்பார்வையில் கலந்துகொண்டனர்.

24.09.2017 அன்று நாட்டு நலப்பணித் திட்ட அணி எண் 77ன் ஒருநாள் சிறப்பு முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. திட்ட செயல் அலுவலர் முனைவர் வு.செல்லத்துரை மேற்பார்வையில் நடைபெற்ற இம்முகாமில் இரண்டாமாண்டு மாணவர்கள் 46 பேர் கலந்துகொண்டு கல்லூரி வளாகத்தினை தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.

28.09.2017 அன்று மதுரையில் தூய்மை இந்தியா திட்டத்தின் (ளுறயவஉா டீாயசயவா) கீழ் நடைபெற்ற வைகை ஆற்றினை சுத்தம் செய்யும் பணியில் தேசிய மாணவர் படை மாணவர்கள் 78பேர் கலந்துகொண்டு சிறப்பாக பணியாற்றியமைக்காக மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டுக்கள் பெற்றனர்.

29.09.2017 அன்று கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த தலைமையில நமது கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் திருவேடகம் துர்க்கை அம்மன் கோயில் படித்துறையின் படிகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

**கலை இலக்கிய மன்றம்**

04.09.2017 அன்று மதுரையில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக நடைபெற்ற டாக்டர் எம்.ஜிஆர். நூற்றாண்டு விழா போட்டிகளில் கலை இலக்கிய மன்ற மாணவர்கள் 3 பேர் கலந்துகொண்டனர். அதில் கவிதைப் போட்டியில் ஆ.பவித்ரன் (ஐஐ ஊாந) முதல் பரிசு பெற்றார்.

15.09.2017 அன்று மதுரை, ராஜா முத்தையா மன்றத்தில் தமிழ் இசைச் சங்கம் சார்பில் நடைபெற்ற இசைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி போட்டிகளில் 3 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**கல்லூரி விடுமுறை மற்றும் திறக்கும் நாள்**

14.10.2017 சனிக்கிழமையன்று பிற்பகல் மாணவர்கள் அனைவரும் தீபாவளி விடுமுறைக்காக தத்தமது ஊர்களுக்குச் செல்கிறார்கள். கல்லூரி மீண்டும் 20.10.2017 அன்று திறக்கப்பட உள்ளது. முதலாமாண்டு மாணவர்கள் 19.01.2017 புதன்கிழமையன்று மாலை 6.00 மணிக்குள்ளும், மற்ற மாணவர்கள் 8.00 மணிக்குள் கல்லூரிக்கு வந்துவிடவேண்டும். அன்றைய இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

மாணவர்களின் ஆங்கிலப் புலமையை மேம்படுத்த மாணவர்கள் விடுமுறை நாட்களில் தினசரி நிகழ்வுகளை ஆங்கிலத்தில், 200 வார்த்தைகளில் அனைத்து நாட்களுக்கும் எழுதி பெற்றோரிடம் அன்றாடம் கையொப்பம் பெற்றுவரவேண்டும்.

மாணவர்கள் வீட்டிற்குச் சென்றவுடனும், வீட்டிலிருந்து கல்லூரிக்குத் திரும்பும் போதும் தாய் தந்தையர் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று வரவேண்டும்.

**குருதிக்கொடை**

16.09.2017 அன்று மதுரை, ராஜாஜி அரசு மருத்துவமனையில் ‘$AB^{+}$’ வகை இரத்தம் கொண்ட மூன்றாமாண்டு வணிகவியல் மாணவர் P.கமல்பிரசாத் இரத்தம் தானம் செய்தார்.

**2017 செப்டம்பர் மாதத்திற்கான கட்டண விவரம்**

உணவுக் கட்டணம் நாள் ஒன்றுக்கு - ரூ.85/-

முதலாமாண்டு விலங்கியல் மாணவர்களுக்கு Practical Record வழங்கியது - ரூ.110/-

இரண்டாண்டு விலங்கியல் மாணவர்களுக்கு Practical Record வழங்கியது - ரூ.110/-

மூன்றாமாண்டு விலங்கியல் மாணவர்களுக்கு Practical Record வழங்கியது - ரூ.220/-

இரண்டாமாண்டு தாவரவியல் மற்றும் இரண்டாமாண்டு வேதியியல் மாணவர்களுக்கு துணைப்பாட விலங்கியல் Practical Record வழங்கியது - ரூ.55/-

முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு முதுகலை விலங்கியல் மாணவர்களுக்கு Practical Record வழங்கியது - ரூ.220/-

முதலாமாண்டு விலங்கியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.290/-

இரண்டாண்டு விலங்கியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.383/-

மூன்றாமாண்டு விலங்கியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.575/-

இளங்கலை மூன்றாமாண்டு வேதியியல் மாணவர்களுக்கான Industrial Visit கட்டணம் - ரூ.415/-

முதுகலை முதலாமாண்டு வேதியியல் மாணவர்களுக்கான Industraial Visit, CSIR புத்தகக் கட்டணம் - ரூ.1465/-

இளங்கலை முதலாமாண்டு கணிதவியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.215/-

இளங்கலை இரண்டாமாண்டு கணிதவியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.559/-

இளங்கலை மூன்றாமாண்டு கணிதவியல் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கியது - ரூ.1350/-

இரண்டாமாண்டு இயற்பியல் மற்றும் இரண்டாமாண்டு வேதியியல் மாணவர்களுக்கு துணைப்பாட கணிதவியல் Practical Record வழங்கியது - ரூ.55/-

அன்பும் நமஸ்காரமும்

இடம்: திருவேடகம் மேற்கு **முனைவர் சி.இராஜா**

நாள்: 05.10.2017 முதல்வர்